எந்தக் குளத்தையும் விட்டுவிட வேண்டுமென்று எந்த அரசாங்கமும் விரும்பாது!

# விவசாயிகளுடைய நலனைப் போற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது!

## பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினருக்கு – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!



சென்னை, மார்ச் 28-

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே. செல்வராஜ் பேசுகையில், அத்திக்கடவு அவிநாசி திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விடுபட்ட பகுதிகளுக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டம் வேண்டும் என்று பேசினார்.

அப்போது நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறுக்கிட்டு பதிலளித்து பேசியதாவது:

**நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் :** அமைச்சராக இருந்தவர். அவருக்கு எப்படி பதில் சொல்வது என்பது தெரியும். அதே பதிலைத்தான் நானும் சொல்கிறேன். அதில் விடுபட்டுப்போனவைகள் எல்லாம் ஏராளம். முதலிலே இந்தத் திட்டம் வராது என்றும், இந்தத் திட்டம் எங்கள் ஊருக்கு வேண்டாம் என்றும் சொல்லிவிட்டார்கள். இப்போது தண்ணீர் வருவதைப் பார்த்துவிட்டு எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை கையில் எடுப்பதற்கு கிட்டத்தட்ட ரூ.6,000 கோடி தேவைப்படுகிறது. ஆகவே, இது நிதி நிலைமைக்கேற்ப எடுக்கப்படும். ஆகையினால் எந்தக் குளமும் விட்டுவிட வேண்டுமென்று எந்த அரசாங்கமும் விரும்பாது. ஆகையினால் விவசாயிகளுடைய நலனைப் போற்றுவதில் நான் உங்களைவிட, பின்னடைய மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பதிலளித்தார்.

கோவை வடக்குப் பகுதியில் –

# தொழிற்பேட்டை அமைக்க தனியார் முன்வந்தால் அரசு மானியம் வழங்கும்!

## பேரவையில் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளக்கம்!



*சென்னை, மார்ச் 28-*

***கோவை வடக்குப் பகுதியில் - தனியார் தொழிற்பேட்டை அமைக்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான அரசு மானியம் வழங்கும் என பேரவையில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் விளக்கம் அளித்துள்ளார்.***

*சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அளித்த விளக்கம் வருமாறு :-*

***அம்மன் கே.அர்ச்சுனன்:***

*அ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, வீர கேரளம், வட வள்ளி, சங்கனூர், தெலுங்கு பாளையம், கணபதி கிழக்கு, கணபதி மேற்கு ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் துவங்க அரசு ஆவன செய்யுமா?*

*ஆ) ஆம் எனில், எப்போது?*

***அமைச்சர் தா.மோ.அன்பரசன்:***

*கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*கோயம்புத்தூர் வடக்கு தொகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள குறிச்சி தொழிற்பேட்டையில் சுமார் 5 ஆயிரம் தொழிலாளர்களுடன், 242 தொழிற்சாலைகளும், காளப்பட்டி தொழிற்பேட்டையில் சுமார் 600 தொழிலாளர்களுடன், 29 தொழிற்சாலைகளும், மலுமிச்சம்பட்டி தொழிற்பேட்டையில் சுமார் 2500 தொழிலாளர்களுடன், 128 தொழிற்சாலைகளும் ஆக மொத்தம், 3 சிட்கோ தொழிற்பேட்டைகள் கோயம்புத்தூர் வடக்கு தொகுதிக்கு அருகில் ஏற்கெனவே இயங்கி வருகிறது. மோப்பிரி பாளையத்தில் ரூ.10 கோடி அரசு மானியத்துடன் ரூ.24 கோடியே 32 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 225 ஏக்கர் பரப்பளவில் 202 மனைகளை கொண்டும், கல்லப்பாளையத்தில் ரூ.10 கோடி அரசு மானியத்துடன் ரூ. 20 கோடி திட்ட மதிப்பீட்டில் 116.24 ஏக்கர் பரப்பளவில் 120 மனைகளை கொண்டும், 2 தனியார் தொழிற்பேட்டைகள் கழக அரசு பொறுப்பேற்ற பின் பயன்பாட்டிற்கு கொண்டுவரபட்டுள்ளது. மேலும், சொலவம் பாளையத்தில் ரூ. 9 கோடியே 3 லட்சம் அரசு மானியத்துடன் ரூ. 18 கோடியே 6 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 41.42 ஏக்கர் பரப்பளவில் 78 மனைகள் கொண்ட தனியார் தொழிற்பேட்டை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கோரியபடி இப்பகுதியில் புதிதாக தொழில் போட்டை அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.*

*கரூர் மாவட்டம், கரூர் ஆத்தூர் தொழில்பேட்டை இந்து சமய அறநிலையத்துறையின் நிலத்தில் 1992 ஆம் ஆண்டு 99 மனைகளுடன் அமைக்கப்பட்டு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இது கோயிலுக்கு சொந்தமான நிலமாக உள்ளதால் நீதிமன்ற வழக்கின் காரணமாக தொழில் மனைகளுக்கு தற்போது பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையை இந்து சமய அறநிலையத்துறையிடம் ஆலோசித்து சாத்தியக்கூறு இருக்கும் பட்சத்தில் முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும்.*

*தங்கள் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் குறைந்தபட்சம் 15 ஏக்கர் தகுதியான அரசு புறம்போக்கு நிலம் இருக்கும் பட்சத்தில், சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைத்து தரப்படும். 20க்கு மேற்பட்ட தொழில் முனைவோர்கள் கூட்டாக சேர்ந்து குறைந்த பட்சம் 10 ஏக்கர் நிலத்துடன் தனியார் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும் பட்சத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி, தெரு விளக்கு உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்திட ரூ. 15 கோடி வரை அரசு மானியம் வழங்கி தொழில்பேட்டை அமைக்க அரசு உதவி செய்யும்.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலளித்தார்.*

ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து

# தஞ்சை தெற்கு மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை!



*தஞ்சை, மார்ச் 28-*

*100 நாள் வேலை திட்டத்தில் தமிழ்நாடு அரசுக்கு வழங்கவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க தலைமையிலான ஒன்றிய அரசைக் கண்டித்து ஒன்றியங்கள் தோறும் மாபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர் வெளியட்டுள்ள அறிக்கை வருமாறு :*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையினை ஏற்று 100 நாள் வேலை உறுதி திட்டம் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் நாளை (29.03.2025-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் கீழ்கண்ட பகுதிகளில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.*

*மதுக்கூர் மேற்கு - மதுக்கூர் வடக்கு, மதுக்கூர் கிழக்கு - சிரமேல்குடி, பட்டுக்கோட்டை கிழக்கு - தம்பிக்கோட்டை வடகாடு, பட்டுக்கோட்டை மேற்கு - கரம்பயம், பட்டுக்கோட்டை வடக்கு - துவரஞ்குறிச்சி, பட்டுக்கோட்டை தெற்கு- சேண்டாக்கோட்டை, திருவோணம் தெற்கு ஊரணிபுரம், பேராவூரணி தெற்கு - ஒட்டாங்காடு, பேராவூரணி வடக்கு - திருச்சிற்றம்பலம், சேதுபாவாசத்திரம் வடக்கு - பூக்கொல்லை, போது பாவாசத்திரம் தெற்கு - ரெட்ட வயல் ஆகிய பகுதிகளில் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.*

*அதுசமயம் முன்னாள் - இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநில - மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் தங்ளது பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவும்.*

*நகர மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தங்கள் பகுதிக்கு அருகில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.*

*இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

கழக மூத்த முன்னோடி -முன்னாள் ஒன்றியச் செயலாளர்

# சி.தேசிங்குராஜன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி



*தருமபுரி, மார்ச் 28-*

*தருமபுரி மாவட்டம் அரூர் வடக்கு ஒன்றியம் அக்ரஹாரம் ஆட்டையாம் பட்டியில் கழக மூத்த முன்னோடி முன்னாள் அரூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், தருமபுரி மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுதறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் சி.தேசிங்குராஜன் மறைவெய்தினார்.*

*அவரது உடலுக்கு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்ட கழக பொறுப்பாளர்கள் பி.என்.பி.இன்பசேகரன், பி.தர்மச்செல்வன், இரா. சித்தார்த்தன், சென்னகிருஷ்ணன், அ.சத்தியமூர்த்தி, ஆர்.பி.செந்தில்குமார்,*

*கலை, ராஜேந்திரன், ஆர்.வேடம்மாள், சந்திரமோகன், வே.சௌந்தரராசு, செங்கண்ணன், நெப்போலியன், எம். ரத்தினவேல், முத்துக்குமார் பி.எஸ்.சரவணன், முல்லை ரவி, ஆர்.சிவகுரு, கு.தமிழழகன், அருன் உதயசூரியன், விடுதலை சிறுத்தை மாவட்ட கழக செயலாளர் சாக்கன்சர்மா, மதிமுக மாவட்ட செயலாளர்*

*இராமதாஸ்,திராவிடர் கழகம் ஊமைஜெயராமன், மற்றும் கழக மாநில, மாவட்ட ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கிளைகழக நிர்வாகிகள் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.*

பெரிய ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டியுள்ளதால் தாமதம்;

# தேர்தல் நடத்துவதில் மாறுபட்ட கருத்தில்லை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!



***சென்னை, மார்ச் 28 -***

***சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே. செல்வராஜ் பேசுகையில், உள்ளாட்சி தேர்தல் குறித்து பேசினார்.***

***அப்போது அமைச்சர் கே.என்.நேரு அளித்த விளக்க பதில் வருமாறு:***

தேர்தல் நடத்துவதைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களிடம் உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே தேர்தல் நடத்தக்கூடாது என்பது அல்ல; நீதிமன்றத்திலே நாம் சொல்லியிருப்பதே சில ஊராட்சிகளை நகராட்சிகளோடு இணைக்கவும், மாநகராட்சிகளோடு இணைக்கவும் அப்படி இணைக்கிற பணி முடிந்தபிறகு, *communal rotation* புதிதாகப் போடப்பட வேண்டும். அப்படி *communal rotation* புதிதாகப் போடப்பட்டு, அந்தத் தேர்தல் நடைபெற வேண்டும். இதில் ஏற்கெனவே இன்னும் 9 மாவட்டங்கள் ஓராண்டு காலம் இருக்கிறது.

அந்தப் பதவிக்காலம் இருக்கிறது. எனவேதான், ஒருசில பகுதிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டியிருக்கிறது. பெரிய ஊராட்சியாக இருக்கின்றன. அவற்றை இரண்டாகப் பிரிக்க வேண்டியிருக்கிறது. ஊரக ஒன்றியங்கள் இருக்கின்றன. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டியிருக்கிறது.

குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறையெல்லாம் அந்தக் குழுவின் சார்பாக முடிவு எடுக்கப்படும்.

சில நபர் சேர்க்க வேண்டுமென்றும் என்றும், சில நபர் சேர்க்க வேண்டாம் என்றெல்லாம் சொல்கிறார்கள். செ. ராஜேஷ் குமார் அவர்கள் சேர்க்க வேண்டாம் என்கிறார். ஆனால் எல்லா பணிகளும் *cement road*ஆக போட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

எங்களுக்கு ஒன்றும் அதிலே மாறுபட்ட கருத்து அல்ல; ஊராட்சிகளை இணைக்க வேண்டும். காலையிலே கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, நகரத்தை ஒட்டியிருக்கின்ற காரணத்தால் குப்பைகளைக் கொட்டுவதால் ஏற்படுகிற சிரமத்தைப் பற்றிச் சொன்னார்கள். பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள்.

எனவே, புறம்போக்கு இடம் கிடைக்குமானால் உடனடியாக இந்த அரசுத் திட்டங்களை நிறை வேற்றுவதற்குச் சாதகமாக இருக்கும். அப்படி அரசுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் அதை இணைக்க வேண்டும் என்பதுதான் திட்டம்;

இரண்டாவதாக, இந்த வீதியில் இருக்கும்போது அனைத்து வசதிகளும் இருக்கிறது.

கிராமங்கள் இருக்கின்றபோது அந்த வசதி இல்லாமல் இருக்கின்றது. அந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவேதான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. அதிலே இறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துருவைக் கேட்டு, குழு இறுதியாக முடிவு எடுக்கும்.


அதை இரண்டு துறை அதிகாரிகளும் சேர்ந்து முடிவு எடுப்பார்கள். அதற்காகத்தான் கொஞ்சம் தாமதம் ஆகிறதேதவிர வேறு ஒன்றும் இல்லை.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஒன்றிய பா,ஜ.க. அரசைக் கண்டித்து

# நாகை மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக்கழகச்செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை, மார்ச் 28-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

100 நாள் வேலைஉறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் நாளை (29,3,2025) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் வேண்டும். அதன் படி நாகை மாவட்டத்தில் தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறும் இடங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய , நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத்தினர் அதிக அளவில் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டும்

அதன் படி திருமருகல் வடக்கு ஒன்றியத்தில் இடையத்தான்குடி கணபதிபுரத்திலும், திருமருகல் மொயின்ரோடு, திருமருகல் தெற்கு ஒன்றியம் நரிமனம், கோட்டூர் ஆகிய இடங்களிலும், நாகை வடக்கு ஒன்றியம் சிக்கல் கடைத்தெரு, தேமங்கலம் ஆழியூர் பிரிவுசாலை ஆகிய இடங்களும், நாகை தெற்கு ஒன்றியம் செம்பியன்மகாதேவி பஞ்சாப்நேசனல் வங்கி முன்பும், குறிச்சி கடைத்தெருவிலும்,

கிழ்வேளூர் வடக்கு ஒன்றியம் கீழ்வேளூர் கடைத்தெரு, இராதாமங்கலம் மதகடி, கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் தேவூர் கடைத்தெரு, வலிவலம் கடைத்தெரு, கீழையூர் கிழக்கு ஒன்றியம் திருப்பூண்டி கடைத்தெரு, கீழையூர் கடைத்தெரு, கீழையூர் மேற்கு ஒன்றியம் பாங்கல் கடைத்தெரு, வாழக்கரை கடைத்தெரு, தலைஞாயிறு ஒன்றியம் சீர்முளை கடைத்தெரு, கள்ளிமேடு கடைத்தெரு, வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் ஆயக்காரன்புலம் கடைத்தெரு, வாய்மேடு கடைத்தெரு, வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் நெய்விளக்கு கடைத்தெரு, கரியாப்பட்டினம் கடைத்தெரு ஆகிய இடங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் கூறியுள்ளார்.

100 நாள் வேலை உறுதித்திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# சேலம் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!



100 நாள் வேலை உறுதித்திட்டத்தில் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் 29.03.2025 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

| ஒன்றியம் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| நங்கவள்ளி | டி.எம்.செல்வகணபதி<br>மாவட்ட கழக செயலாளர் | சூரப்பள்ளி ஊராட்சி, தபால் நிலையம் அருகில் |
| | திருமதி. எஸ்.எலிசபெத்ராணி<br>மாவட்ட கழக துணை செயலாளர்<br>பி.பொன்னுசாமி<br>மாவட்ட கழக பொருளாளர் | கோனூர் ஊராட்சி தபால் நிலையம்,<br>ஆஞ்சுநேயர் கோவில் அருகில். |
| சங்ககிரி | பி.தங்கமுத்து<br>மாவட்ட கழக அவைத்தலைவர்<br>திருமதி. எஸ்.தங்கமணி<br>பொதுக்குழு உறுப்பினர் | தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி,<br>கிடையூர் பேருந்துநிலையம் |
| | கே.எம்.ராஜேஸ்<br>ஒன்றிய கழக செயலாளர்<br>எஸ்.பி.ரவிக்குமரன்<br>பொதுக்குழு உறுப்பினர் | கோனேரிப்பட்டி ஊராட்சி,<br>காவேரிப்பட்டி அரசுமரத்து பேருந்துநிலையம் |
| கொங்கணாபுரம் | அ.த.சம்பத்குமார்<br>மாவட்ட கழக துணை செயலாளர்<br>மு.சௌந்தர்ராஜன்<br>பொதுக்குழு உறுப்பினர் | கோரணம்பட்டி ஊராட்சி, மூலப்பாதை |
| | ப.பரமசிவம்<br>ஒன்றிய கழக செயலாளர் | வெள்ளாளபுரம் ஊராட்சி, வெள்ளாளபுரம் |
| தாரமங்கலம் மேற்கு | ஆர்.பாலகிருஷ்ணன்<br>ஒன்றிய கழக செயலாளர் | பாப்பம்பாடி ஊராட்சி, சந்தை திடல் |
| எடப்பாடி | க.சுந்தரம்<br>மாவட்ட கழக துணை செயலாளர்<br>திரு. கே.என்.நல்லதம்பி<br>ஒன்றிய கழக செயலாளர் | சித்தூர் ஊராட்சி, சந்தை திடல் |
| | பி.எ.முருகேசன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>எஸ்.பூவாகவுண்டர்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் | ஆவணிபேரூர் கீழ்முகம் ஊராட்சி,<br>போடிநாய்க்கம்பட்டி பேருந்துநிலையம் |
| மகுடஞ்சாவடி | க.பச்சமுத்து<br>ஒன்றிய கழக செயலாளர்<br>க.அன்பழகன்<br>பொதுக்குழு உறுப்பினர் | தப்பகுட்டை ஊராட்சி, காளிங்கானூர்<br>மகுடஞ்சாவடி ஊராட்சி,<br>மகுடஞ்சாவடி பேருந்துநிலையம் |
| மேச்சேரி | எஸ்.சீனிவாசபெருமாள்<br>ஒன்றிய கழக செயலாளர் | அரங்கனூர் ஊராட்சி, செம்மனூர் |
| | ஆர்.காசிவிஷ்வநாதன்<br>பொதுக்குழு உறுப்பினர் | மல்லிக்குந்தம் ஊராட்சி, மல்லிக்குந்தம்<br>பேருந்துநிலையம் |
| கொளத்தூர் | மு.ராமநாதன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>என்.பழனியப்பன் | சித்தரப்பட்டி புதூர் ஊராட்சி, 4 ரோடு செக்போஸ்ட் |
| | பொதுக்குழு உறுப்பினர்<br>எம்.மிதுன்சக்ரவர்த்தி<br>ஒன்றிய கழக செயலாளர் | காவேரிபுரம் ஊராட்சி, காவேரிபுரம் பேருந்து<br>நிலையம் |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் – முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக 100 நாள் வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பயனாளிகள் அனைவரும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(டி.எம்.செல்வகணபதி)**
மாவட்டச் செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட
தி.மு.க.